**செலசினே தொலைக்காட்சி நிறுவனம்**

**1 நிறுவனத்தினைத் தாபித்தல்**

----------------------------------------------

இந் நிறுவனம் 2001 திசெம்பர் 20 ஆந் திகதி வெகுசனத் தொடர்பு அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய நோக்கங்கள் மற்றும் பணிகளை நிச்சயித்து அதிகாரங்களை செயற்படுத்துவதற்கு அதிகாரச்சட்டமொன்றினாலோ அல்லது வேறேதேனும் சட்டமொன்றினாலோ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. இந் நிறுவனத்தினை “செலசினே லிமிடட்” என கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**2. நிதிசார் கூற்றுக்கள்**

--------------------------------

**2.1 அபிப்பிராயம்**

--------------------

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் காரணமாக கணகாய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எனக்கு முடியாதுள்ளது.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

--------------------------------------------------------------------

**2.2.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தலில் தாமதம்**

-------------------------------------------------------------------------

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் படி கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் வரைபு ஆண்டறிக்கையினையும் நிதிக் கூற்றுக்களையும் தயாரித்து கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அதன் பிரதியொன்றை தொடர்புடைய அமைச்சிற்கும் பொதுத் திறைசேரியின் அரசாங்க முயற்சிகள் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஜுன் 06 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வரைபு ஆண்டறிக்கை அதனுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு நியமங்கள்

---------------------------------------------

18 ஆம் இலக்க நியமத்தின் 43 ஆம் பிரிவின் பிரகாரம் நிலையான சொத்துக்களிற்கு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

--------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் படி 2002 – 2007 காலப்பகுதியில் இனங்காணப்படாத கடன்பட்டோர் ரூபா 902,736 ஆனதுடன் அது மொத்தக் கடன்பட்டோரில் 19% ஆகும். 90 நாட்களிற்கும் மேற்பட்ட கடன்பட்டோர் தொகை ரூபா 14,240,303 ஆகிய மொத்தக் கடன்பட்டோரில் 33% ஆகும். இக் கடன்பட்டோரிற்காக அறவிட முடியா மற்றும் ஐயக்கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் கடன்பட்டோரிற்காக அறவிட முடியா மற்றும் ஐயக்கடன் ஏற்பாடுகள் செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் பணிக்கொடை ஏற்பாட்டிற்காக Defined Benefit Plan முறை பின்பற்றப்படுவதாக காட்டப்பட்டிருந்த போதிலும் பணிக்கொடை அதிகாரச் சட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள விதத்தில் ஏற்பாடுகள் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை கணக்காய்வுக் கட்டணத்தின் பெறுமதி ரூபா 168,639 ஆன போதிலும் ரூபா 30,630 இற்கு மாத்திரம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) விற்பனைப்பட்டடியல் பெறுமதிகளை பேரேட்டிற்கு மாற்றுகையில் ரூபா 3,000 அதிகமாகவும் ரூபா 20,474 குறைவாகவும் மாற்றப்பட்டிருந்தன.

(இ) வருமான வரிக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை**

2010 இன் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள், பெறவேண்டியுள்ள பெறுமதிகள், வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியுள்ள பெறுமதிகள், லெவினங்கள் மற்றும் வங்கி பிணைமுறிகள் ரூபா 149,287,356 இற்கான நிலையான சொத்துக்கள் பதிவேடு, குத்தகை உடன்படிக்கைகள், கொடுப்பனவு உறுதிச்சிட்டைகள், விற்பனைப்பட்டியல்கள், பட்டோலைகள், மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் உரியவாறு தயாரிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வு போன்ற சான்றுகள் இன்மை காரணமாக கணக்காய்வில் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த/மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

**2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2002 ஜுன் 27 ஆந் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | ரூபா 500,000 பெறுமதியினை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட் டிருக்கவில்லை |
| (ஆ) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ /12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 6.5.3 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவுற்று 150 நாட்களிற்குள் ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 2003 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரைக்குமான ஆண்டறிக்கையினைத் தயாரிப்பதற்கோ பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கோ |

| | | |
|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 9.2 ஆம் பிரிவு (ஈ) | நிறுவனத்தின் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரித்த ஊழியர் கோப்பு பொதுத் திறைசேரியின் அரசாங்க முயற்சிகள் திணைக்களத்திடம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள் (நி.பி) | |
| | (i) நி.பி. 138(6) | செலவினங்களை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான பட்டோலைகள், உறுதிச்சான்றுகள், பற்றுச்சீட்டுக்கள் போன்றன உறுதிச்சீட்டுக்களுடன் இணைக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளிற்கு உட்படுத்தப்பட்ட ரூபா 2,270,085 பெறுமதியான 43 உறுதிச்சீட்டுக்களுடன் தொடர்புபட்ட பற்றுச்சீட்டுக்கள், சிட்டைகள், அறிவித்தல் பத்திரங்கள், உறுதிச்சான்றுகள் மற்றும் சம்பள விபரங்களின் பிரதிகள் இணைக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நி.பி. 386(7) | நிராகரிக்கப்பட்ட காசோலைகளை அடியிதழ்களுடன் இணைத்து காசோலைப் புத்தகத்தில் வைத்திருக்க வேண்டிய போதிலும் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளிற்கு உட்படுத்தப்பட்ட ரூபா 1,850,000 பெறுமதியான 2 காசோலைகள் சம்பந்தமாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை. | உரிய பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணிவரப் பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைகள் கட்டண (விசேட) ஏற்பாடுகள் அதிகாரச்சட்டம் | ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவொன்றைச் செலுத்துகையில் ரூபா 25 முத்திரையொன்றின் மீது பணத்தினைப் பெற்றுக் கொண்டவர் கையொப்பமிட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட ரூபா 10,304,670 தொகையான 81 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தொடர்பில் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

நிறுவனத்தின் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 1,013,763 வரிக்கு முந்திய தேறிய இலாபமொன்றானதுன் இதற்கொப்பாக முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முந்திய தேறிய இலாபம் ரூபா 2,146,537 ஆனமையால் வரிக்கு முந்திய தேறிய இலாபத்தில் ரூபா 1,402,774 பின்னடைவொன்றைக் காண முடிந்தது. 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 49,860,470 ஆல் அதாவது 53% ஆல் அதிகரித்திருந்த போதிலும் நிறுவனத்தின் ஒட்டுமொத்த செலவினம் 56% ஆல் அதிகரித்திருந்தமை காரணமாக ஒட்டுமொத்த இலாபம் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 58% இனால் குறைவடைந்திருந்தது.

### 3.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 3.2.1 செயற்பாடற்ற கணக்குகள்

ரூபா 1,685,425 ஆன முற்கொடுப்பனவுக் கணக்கொன்றும் ரூபா 18,492 ஆன கடன்பட்டோரின் 2 பேரேட்டுக் கணக்குகளும் ரூபா 341,463 ஆன 4 கடன்கொடுத்தோர் கணக்குகளும் ரூபா 6,500 ஆன 2 வங்கிக் கணக்குகளும் 2008 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**3.2.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

ரூபா 22,236 ஆன 4 கடன்கொடுத்தோர் கணக்குகள் போதிய அதிகாரமின்றி 2010 ஆம் ஆண்டில் திரட்டிய நிதியத்திற்கு எதிராக பதிவழக்கப்பட்டிருந்தது.

**3.2.3 பணிப்பாளர் சபை**

2010 ஆம் ஆண்டுக்காக பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2010 ஆம் ஆண்டுக்காக உரிய பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு பிரிவிற்குமான வருமானங்களும் செலவினங்களும் தனித்தனியாக இனங்கண்டு கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாடுகளில் உள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பெறவேண்டிய வருமாணங்களை அறவிடுதல்

(ஆ) பதவியணி

(இ) பிதிவேடுகளைப் பேணுதல்